# மட்டக்களப்பு மாவட்ட கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக பிரிவில் வீட்டுத்துறையினரின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகள்

பிறேமலா, கோ.[1], மகேஸ்வரநாதன், ச.[2]

[1]பொருளியல் கற்கைகள் அலகு, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[2]பொருளியல் துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம்,கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
*gpremala91@gmail.com[1] mahe26saro@yahoo.com[2]*

**ஆய்வுச்சுருக்கம் -** முதலீட்டுடன் நேரடித் தொடர்புடையதாக காணப்படுகின்ற சேமிப்பானது ஒரு நாட்டினது பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி மற்றும் மூலதன வளங்களின் உருவாக்கத்திற்கும் இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது. எந்தவொரு நாட்டினதும் உள்நாட்டு சேமிப்பு அந்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சி மற்றும் அதன் உறுதிப்பாடு என்பவற்றுக்கு பங்களிப்புச் செய்கின்றது. அத்தகைய உள்நாட்டு சேமிப்பின் அதிகரிப்பிற்கு பங்களிப்பு செய்கின்ற முக்கிய துறையாக வீட்டுத்துறையின் சேமிப்பு காணப்படுகின்றது. வீட்டுத்துறையின் சேமிப்பு நாட்டிற்கு நாடு பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்டுக்காணப்படுகின்றது. ஏனைய வளர்ந்து வரும் நாடுகளில் பங்களிப்புச் செய்வது போன்றே இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் ஏனைய சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும் வீட்டுத்துறையினரின் சேமிப்பானது பங்களிப்புச் செய்கின்றது. அந்தவகையில் இலங்கையின் வீட்டுத்துறையின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை கண்டறிவது ஆராயப்படவேண்டிய ஒன்றாக உள்ளது. ஆய்வுப் பிரதேசமான கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வீட்டுத்துறையினர் வெவ்வேறுபட்ட வருமானம் மற்றும் வாழ்க்கைத்தரத்தைக் கொண்டு காணப்படுகின்றனர். எனவே ஆய்வுப் பிரதேசத்தில் வீட்டுத்துறையின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகளை கண்டறிவதை பிரதான நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்விற்காக முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுகள் ஆய்வுப் பிரதேசத்திலுள்ள 100 வீட்டுத்துறையினரை வசதி மாதிரி எடுப்பு நுட்பத்தினை பயன்படுத்தி தெரிவு செய்யப்பட்டு கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளதுடன்அத்தரவுகள் பல்மாறிப் பிற்செலவு முறையினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் சார் மாறியாக வீட்டுத்துறையின் சேமிப்பினையும் சாரா மாறிகளாக குடியியல், சமூக பொருளாதார காரணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவுகளின் படி வீட்டுத்துறையினரின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் சாரா மாறிகளான குடியியல் காரணிகளுள் வயது நேர்க்கணிய தாக்கத்தினையும், பால் நிலை, வீட்டு அங்கத்தவர் எண்ணிக்கை, திருமணநிலை என்பன எதிர்க்கணிய தாக்கத்தினையும் சமூகப் பொருளாதார காரணிகளுள் உயர்கல்வி, தொழில் நிலை, வருமானம், வட்டி வீதம் என்பன நேர்க்கணியத் தாக்கத்தினையும் வாழ்க்கைச்செலவு எதிர்க்கணிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. வீட்டுத்துறையின் சேமிப்பில் திருமண நிலையான விதவை, கணவனை பிரிந்து வாழ்பவர், கல்வி நிலையில் ஆரம்பகல்வி, இடைநிலைக்கல்வி, க.பொ.உயர்தரம் என்பன பொருண்மைத்தன்மை அற்றதாகவும் காணப்படுகின்றமைஆய்வு முடிவுகளாக பெறப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேச வீட்டுத்துறையினரின் சேமிப்பில் சமூகப் பொருளாதார காரணிகளே அதிகளவு செல்வாக்குச் செலுத்துகின்றன. இவ்வாய்வின் துணிவுக் குணகம் (சு2) 0.8774ஆகும். இதன்படி இவ்வாய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட சாராமாறிகள் அனைத்தும் சார்ந்த மாறியான வீட்டுத்துறையின் சேமிப்பின் விலகலை 88மூவிளக்கி நிற்கின்றன. மேலும் அரசு மற்றும் கொள்கை வகுப்பாளர்களினால் வீட்டுத்துறையின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை அடையாளம் காண்பதற்கும் இலங்கையின் உள்நாட்டு சேமிப்பின் அளவினை அதிகரிப்பதற்கான கொள்கைகளையும் திட்டங்களையும் வகுப்பதற்கு இவ்வாய்வுஉதவியாக அமையும்.

**முதன்மைச் சொற்கள்-** சமூகப் பொருளாதார காரணி, சேமிப்பு, நுகர்வு, வருமானம்,வீட்டுத்துறை

## I. அறிமுகம்

எந்தவொரு நாட்டிலும் உயர் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தியினை அடைவதற்கு சேமிப்பு முக்கிய பங்கு வகிக்கின்றது.எதிர்கால பயன்பாட்டிற்கான தற்போதைய வருமானத்தின் ஒரு பகுதியை செலவு செய்யாது மீதப்படுத்தும் ஒரு செயற்பாடு சேமிப்புக்களாக வரையறுக்கப்படுகின்றது[1].சேமிப்பு தனிநபர்களின் வருமானம் உழைக்கும் ஒரு பகுதியாகவும் காணப்படுகின்றது[2].

ஒவ்வொரு நாட்டின் வீட்டுத்துறையும் அந் நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது[3]. வீட்டுத்துறையானது இறுதி பொருட்கள் சேவைகளை நுகர்வோராகவும் ஊழியத்தை வழங்குபவராகவும் ஊழிய வருமானத்தை பெற்றுக்கொள்வதாகவும் நிலையான சொத்துக்களில் முதலீட்டு நிதிக்கு சேமிப்பதற்கான மூலமாகவும் காணப்படுகின்றது[4]. உள்நாட்டு சேமிப்பு சமூக பொருளாதார வளர்ச்சி மற்றும் அதன் உறுதிப்பாடு என்பவற்றுக்கு பங்களிப்புச் செய்கின்றது.ஒரு நாட்டின் உள்நாட்டு சேமிப்பானது தனியார் சேமிப்பு (கூட்டுத்தாபனம், வீட்டுத்துறை), அரச சேமிப்புக்கள் மூலம் உருவாகின்றது. ஒரு நாட்டின் உள்நாட்டு சேமிப்பிற்குள் வீட்டுத்துறையினரது சேமிப்பு மிகப்பெரிய பங்கு வகிக்கின்றது. அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளை பொறுத்த வரையில் வீட்டுத்துறையினரின் சேமிப்பானது முதலீடுகளை அதிகரித்து பொருளாதார மூலதனத்தை அதிகரிப்பதற்கு நேரடியாக முதலீட்டில் தாக்கம் செலுத்துவதாகவும் காணப்படுகின்றது[4].

அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளின் உலகலாவிய மாற்றங்களுக்கு சேமிப்பானது முக்கிய காரணமாக காணப்படுகின்றதுடன் வீட்டுத்துறையின் சேமிப்புஅந் நாடுகளின்நலனை முக்கியமாக தீர்மானிக்கின்றது[5].

வீட்டுத்துறையினரின் சேமிப்பானது ஏனைய வளர்ந்து வரும் நாடுகளில் பங்களிப்புச் செய்வது போன்றே இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் ஏனைய சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும் பங்களிப்புச்செய்கின்றது. ஏனைய பெரும்பாலான நாடுகளைப் போல இலங்கையின் மூலதன திரட்சியானது முக்கியமாக சேமிக்கும் ஆற்றலிலேயே தங்கியுள்ளது[6].

இலங்கையின் பொருளாதாரத்தில் உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2016 இல் ரூபா 2,820.1பில்லியனை அடைந்ததோடு 2015 இல் பதிவு செய்யப்பட்ட 8.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016 இல் 23.2 சதவீத வளர்ச்சியை பெற்றுள்ளது. இது 2015 இல் 20.9 சதவீதமாகவும் 2016 இல் 23.8 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது . அதே வேளை வீட்டுத்துறையின் சேமிப்பானது 2015 இல் 22.60 சதவீதமாக காணப்பட்டதுடன் 2016 இல் 23.80 சதவீதமாக அதிகரித்துள்ளது. எனினும் சராசரி சேமிப்பானது 2003 தொடக்கம் 2016 வரை 20.16 சதவீதமாக காணப்படுகின்றது.

வீட்டுத்துறையின் சேமிப்பானது நாட்டிற்கு நாடு பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இந்த வகையில் ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள மக்கள் பல்வேறுபட்ட வருமானம் மற்றும் வாழ்க்கைத்தரத்தைக் கொண்டு காணப்படுகின்றனர். இவ் வீட்டுத்துறையினர் இப் பிரதேசத்தில் காணப்படுகின்ற வங்கிகளினையும் ஏனைய நிதி சார் நிறுவனங்களையும் அடிப்படையாகக் கொண்டு தமது சேமிப்பினை மேற்கொள்பவர்களாக காணப்படுகின்றனர்.

## II. ஆய்வுப்பிரச்சினை

இலங்கையின் வீட்டுத்துறையினரது சேமிப்பு வீதமானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது சராசரியாக அதிகரித்த போக்கினை காட்டுகின்றது. இத்தகைய வீட்டுத்துறையினரின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றி அறியப்பட வேண்டியது முக்கியமானதாகும். கிராம மட்டத்திலான வீட்டுத்துறையின் சேமிப்பினை தீர்மானிப்பதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதாக நடைமுறை ரீதியான ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது[7],[8],[9],[10].

எனவே ஆய்வுப் பிரதேசமான மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக மக்கள் கிராமிய மக்களாககாணப்படுவதுடன் பல்வேறுபட்ட வருமானம் மற்றும் வாழ்க்கைத்தரத்தைக் கொண்டு காணப்படுகின்றனர். எனவே இவ்வாய்வானது இவ்வீட்டுத்துறையினரின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் குடியியல், சமூகப் பொருளாதார காரணிகள் யாவை? எனும் வினாவிற்கு விடை காண்பதாக அமையும்.

## III. ஆய்வு வினாக்கள்

வீட்டுத்துறையினரின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை?
வீட்டுத்துறையினரின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் குடியியல் காரணிகள் எவ்வாறான தாக்கத்தினை செலுத்துகின்றன?
வீட்டுத்துறையினரின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் சமூகப் பொருளாதாரக் காரணிகள் எவ்வாறான தாக்கத்தினை செலுத்துகின்றன?

## IV. ஆய்வின் நோக்கங்கள்

**பிரதான நோக்கம்**

வீட்டுத்துறையினரின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை கண்டறிதல்.

துணை நோக்கங்கள்

வீட்டுத்துறையினரின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் குடியியல் காரணிகளின் தாக்கத்தினை கண்டறிதல்.
வீட்டுத்துறையினரின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் சமூகப் பொருளாதார காரணிகளின் தாக்கத்தினை கண்டறிதல்.

## V. நூலாய்வு

வீட்டுத்துறையினரின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை கண்டறியும் பொருட்டு கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக பிரிவில் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வானது பின்வரும் நடைமுறைரீதியான ஆய்வுகளை நோக்குவதாக காணப்படுகின்றது.

வீட்டுத்துறையினரின் சேமிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வீட்டுத்தலைவரின் வருமானம், வருமானம் பெறும் மூலம், நிலத்தின் அளவு (ஏக்கர்), என்பன வீட்டுத்துறையின் சேமிப்பில் நேரான தாக்கத்தினையும், குடும்பத்தின் அளவு, திருமண நிலை, மொத்த பிள்ளைகளின் கல்விச் செலவு

என்பன எதிரான தாக்கத்தினையும் ஏற்படுத்துவதாக முடிவுகள் பெறப்பட்டுள்ளன[8].

கிராமம் மற்றும் நகரத்தில் சேமிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் பற்றிய ஆய்வில்முடிவாக கிராமம் மற்றும் நகரத்தில் வீட்டுத்துறையின் சேமிப்பில் வருமானம், தொழில் நிலை, வயது என்பன நேர்க்கணிய தொடர்புடையதாகவும் தங்கியிருப்போர் வீதம், கல்வி, திருமண நிலை என்பன எதிர்க்கணிய தொடர்புடையதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. அத்தோடு கிராமம் மற்றும் நகரத்தில் சேமிப்பினை தீர்மானிப்பதில் வருமானம் முக்கிய பங்கினை வகிக்கின்றதாகவும் கண்டறியப்பட்டுள்ளது[7].


மலேசியாவின் சேமிப்பு வீத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றிமேற்கொண்டுள்ள ஆய்வில் சேமிப்பு வீதத்தில் வட்டி வீதமே அதிகளவு செல்வாக்குச் செலுத்துவது கண்டறியப்பட்டுள்ளது [11].

சிடாமா வலயத்திலுள்ள டால் (Dale) மாவட்டத்தில் கிராமிய வீட்டுத்துறையின் சேமிப்பு நடத்தையும் தீர்மானிக்கும் காரணிகள் தொடர்பாகவும் மேற்கொண்ட ஆய்வின் முடிவில் வயது வீட்டுத்துறையின் சேமிப்புடன் நேர் தொடர்புடையதாகவும்வயதின் வர்க்கம் (square ofage) எதிர்க்கணிய தொடர்புடையதாகவும் காணப்படுவதுடன் தங்கியிருப்போர் வீதம், மொத்த வருமானம், குடும்ப அளவு என்பன சேமிப்பினை அதிகரிப்பதிலும் கல்வி, பால், திருமணநிலை, நிலம், கால் நடையின் அளவு என்பன சேமிப்பு குறைவதிலும் தாக்கம் செலுத்துவதாகவும் முடிவு பெறப்பட்டுள்ளது[9].

வீட்டுத்துறையினரின் சேமிப்பை தீர்மானிக்கும் காரணிகள் தொடர்பாக கென்யாவின் கிராமப்புற சிறிய விவசாயிகள், தொழில்முனைவோர், ஆசிரியகளை உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வில்,ஆய்வுமுடிவாக வீட்டுத்துறையின் வருமானம், தொழிலின் தன்மை, பால், வீட்டுத் தலைவரின் கல்வி மட்டம் நேரான தாக்கத்தினையும் கடன் அணுகல், வயது, தங்கிருப்போர் வீதம் எதிரான தாக்கத்தினையும் ஏற்படுத்துவதாக கண்டறிப்பட்டுள்ளது[10].

இவ்வாறாக நாட்டிற்கு நாடு பிரதேசத்திற்கு பிரதேசம் வீட்டுத்துறையின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் வேறுபட்டுக் காணப்படுகின்றதை நூலாய்வு குறித்து நிற்கின்றது.

## VI. எண்ணக்கருவாக்கம்




## VII. ஆய்வு முறையியல்

### தரவு சேகரிப்பு முறை

வீட்டுத்துறையின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை கண்டறியும் இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு2017 ஐப்பசி தொடக்கம் மார்கழியை ஆய்விற்குரிய காலப்பகுதியாகவும் கொண்டுள்ளது.

### மாதிரித்தெரிவு

ஆய்விற்கான தரவு சேகரிப்பானது நிகழ்தகவு சாரா மாதிரி நுட்பமான வசதி மாதிரி எடுப்பு முறை (Convenience sampling) பயன்படுத்தி கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள 100 வீட்டுத் துறையினர் மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டு கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் மூலம்தரவுகள் பெறப்பட்டுள்ளது. வீட்டுத்துறையின் சேமிப்பு தொடர்பான ஆய்வுகளில் வசதி மாதிரித் (convenience sampling) தெரிவு நுட்பமானது முக்கியத்துவம் பெற்று விளங்குவதோடு முன்னர் வெளிவந்த அனுபவ ரீதியான ஆய்வுகளிலும் வசதி மாதிரி நுட்பத்தினை அதிகம் பயயன்படுத்தி ஆய்வுக்கான மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன [1].

**பிற்செலவு மாதிரி**

ஆய்வுப் பிரதேசத்தில் வீட்டுத்துறையினரின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை கண்டறியும் இவ்வாய்விற்காக சேகரிக்கப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக பல்மாறி பிற்செலவு மாதிரி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாய்வில் சார்ந்த மாறியாக வீட்டுத்துறையின் சேமிப்பு (lnHHS) சாரா மாறிகளாக குடியியல் காரணிகளுள் வயது (AGE), பால்நிலை (GEN), திருமணநிலை (MST), குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை (HFZ) என்பவைகளும் சமூகப் பொருளாதார காரணிகளாக கல்வி (EDU), தொழில் (OCU), வருமானம் (INC), வட்டி வீதம் (ஐசேு), வாழ்க்கைச்செலவு (LEC), போன்றவை தெரிவு செய்யப்பட்டு பின்வரும் பல்மாறி பிற்செலவு சமன்பாடு மூலம் கணிப்பிடப்பட்டுள்ளது.

$$LnHHS = \beta0 + \beta1AGE + \beta2GEN + \beta3MST + \beta4\ HFZ + \beta5\ EDC + \beta6OCU + \beta7\ lnINC + \beta8INR + \beta9\ LEC + \varepsilon i$$

**தரவு மதிப்பீட்டு முறை**

வீட்டுத்துறையின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை கண்டறியும் இவ்வாய்விற்காக மாதிரிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் ளுயுயுவுயு (எநசளழைெ 10.0) கணனி மென்பொருளில் பதிவு செய்யப்பட்டு பிற்செலவு அணுகுமுறை மூலமாக முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாய்விற்காக பயன்படுத்தப்பட்டுள்ள வட்டிவீதம், வாழ்க்கைச்செலவு ஆகிய காரணிகள் Likert Scale முறையினூடாக தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இப் பகுப்பாய்விற்காக பயன்படுத்தப்படும் கூற்றுக்கள் பின்வருமாறு வரிசைப் படுத்தப்படுகின்றன.

1. முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை
2. ஏற்றுக்கொள்ளவில்லை
3. ஓரளவு ஏற்றுக்கொள்கின்றேன்
4. ஏற்றுக்கொள்கின்றேன்
5. முழுமையாகஏற்றுக்கொள்கின்றேன்

இவ்வாறாக வழங்கப்பட்ட கூற்றுக்களுக்கான இடைப்பெறுமதிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அவற்றைக் கொண்டு STATA (version 10.0) கணனி மென்பொருள் மூலமாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**VIII. ஆய்வின் முடிவுகள்**

**அட்டவணை VIII.i பிற்செலவு ஆய்வின் முடிவுகள்**

| மாறிகள் | | பிற்செலவு குணக மதிப்புக்கள் (Coefficient) | T பெறுமதி | நிகழ்தகவு பெறுமதி | நியமவழு (Std Error) |
|---|---|---|---|---|---|
| வயது | | 0.0195*** | 3.02 | 0.003 | 0.0065 |
| பால் | | -0.4972* | -1.66 | 0.101 | 0.3000 |
| திருமணநிலை | கணவனை பிரிந்து வாழ்பவர் | -0.5912 | -0.85 | 0.396 | 0.6922 |
| | விதவை | -0.5880 | -0.87 | 0.386 | 0.6744 |
| | திருமணமானவர் | -1.4817** | -1.85 | 0.069 | 0.8026 |
| | திருமணமாகாதவர் | -1.7427** | -2.09 | 0.040 | 0.8353 |
| வீட்டு அங்கத்தவர் எண்ணிக்கை | | -0.0789* | -1.52 | 0.132 | 0.0519 |
| கல்வி நிலை | உயர் கல்வி | 1.1763** | 2.01 | 0.048 | 0.5854 |
| | ஆரம்பக்கல்வி | -0.0982 | -0.41 | 0.681 | 0.2383 |
| | க.பொ.த உயர்தரம் | 0.1066 | 0.31 | 0.761 | 0.3488 |
| | இடைநிலைக்கல்வி | 0.1745 | 0.66 | 0.512 | 0.2652 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தொழில் | விவசாயம் | 0.7771** | 1.74 | 0.086 | 0.4474 |
| | வியாபாரம் | 1.2443*** | 2.58 | 0.012 | 0.4823 |
| | அரச தொழில் | 1.6888*** | 3.13 | 0.002 | 0.5403 |
| | மத்தியகிழக்கு நாட்டில் | 1.5526*** | 3.37 | 0.001 | 0.4613 |
| | கூலி | 0.5919* | 1.30 | 0.197 | 0.4550 |
| வருமானம் | | 1.4143*** | 6.92 | 0.000 | 0.2044 |
| வட்டி வீதம் | | 0.5767*** | 3.48 | 0.001 | 0.1658 |
| வாழ்க்கைச்செலவு | | -0.4120*** | -2.52 | 0.014 | 0.1635 |
| வெட்டுத்துண்டு | | -4.6768 | -2.34 | 0.022 | 1.9973 |

துணிவுக் குணகம் $R^2$ : 0.8774
ஒழுங்கமைக்கப்பட்ட துணிவுக் குணகம் Adj $R^2$ : 0.8483
F பெறுமதி: 30.14
*** , **, * முறையே 1%, 5%, 10% பொருண்மை மட்டம்
மூலம் - ஆய்வுத் தகவல்களின் STATA மென் பொருள் மூலமான பகுப்பாய்வு

பிற்செலவுப் பகுப்பாய்வு முடிவுகளை நோக்கும் போது, வீட்டுத்துறையின் சேமிப்பில் வயதானது ஏற்படுத்தியுள்ள தாக்கத்தின் பிற்செலவு மதிப்பானின் குணகப்பெறுமதி 0.0195 ஆக காணப்படுகின்றது. வயதானது ஒரு வருடத்தினால் அதிகரிக்கும் போது வீட்டுத்துறையின் சேமிப்பு 0.0195வீதத்தினால் நேர்கணிய அதிகரிப்பினை ஏற்படுத்தும். முன்னைய ஆய்விலும் வயது நேர்கணியத்தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்ற முடிவுபெறப்பட்டுள்ளது [7].

வீட்டுத்துறையின் சேமிப்பில் பால்நிலை ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை விளக்குவதற்காக மாற்றுமாறி (Dummy Variable) பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண் பால் நிலைக்கான பிற்செலவு மதிப்பானின் குணகப்பெறுமதி - 0.4972ஆக காணப்படுகின்றது. பால் நிலையானது பெண்ணாக காணப்படும் போது வீட்டுத்துறையின் சேமிப்பு 0.4972வீதத்தினால் வீழ்ச்சியினை ஏற்படுத்தும்.

வீட்டுத்துறையின் சேமிப்பில் திருமண நிலை ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை விளக்குவதற்காக மாற்றுமாறி (Dummy Variable) பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி விவாகரத்தானவர்கள் தன்னிச்சையாக நீக்கப்பட்டுள்ளது. இங்கு விவாகரத்தானவர்கள் நீக்கப்படுகின்றபோது கணவனை பிரிந்து வாழ்தல், விதவை என்பவற்றுக்கும் வீட்டுத் துறையின் சேமிப்பிற்குமிடையலான பிற்செலவு குணகப்பெறுமதிகள் முறையே - 0.5912, -0.5880காணப்படுகின்றது. இவை பொருண்மைத் தன்மை அற்றதாக (Not significant) காணப்படுகின்றது. திருமண நிலையான விவாகரத்தானவர்கள் நீக்கப்படுகின்றபோது திருமணமானவர், திருமணமாகாதர் என்பவற்றுக்கும் வீட்டுத்துறையின் சேமிப்பிற்கு மிடையலான பிற்செலவு குணகப்பெறுமதிகள் முறையே -1.4817இ -1.7427ஆக காணப்படுகின்றது. திருமணமானவர் அல்லது திருமணமாகதவராக காணப்படுகின்ற போது வீட்டுத்துறையின் சேமிப்புக்கள் முறையே 1.4817, 1.7427 வீதத்தினால் வீழ்ச்சியினை ஏற்படுத்தும். முன்னைய ஆய்வுகளில் திருமண நிலை வீட்டுத்துறையின் சேமிப்பில் எதிர்க்கணியத்தாக்கம் செலுத்துகின்றது என்ற முடிவு பெறப்பட்டுள்ளது[7],[8],[9]. இதற்கு இணைந்ததான முடிவே இவ்வாய்விலும் பெறப்பட்டுள்ளது.

குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கைக்கும் வீட்டுத்துறையின் சேமிப்பிற்கும் இடையிலான பிற்செலவுகுணகப்பெறுமதி -0.0789ஆக காணப்படுகின்றதனால்குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை ஒரு நபரினால் அதிகரிக்கும் போது வீட்டுத்துறையின் சேமிப்பு 0.0789வீதத்தினால் வீழ்ச்சியினை ஏற்படுத்தும்.முன்னைய ஆய்விலும் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை எதிர்க்கணிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது [8].

வீட்டுத்துறையின் சேமிப்பில் கல்வி நிலை ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை விளக்குவதற்காக மாற்று மாறி (Dummy Variable) பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு கல்வி கற்காதவர் தன்னிச்சையாக

நீக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் உயர்கல்விற்கும் வீட்டுத்துறையின் சேமிப்பிற்குமிடையிலான பிற்செலவு மதிப்பானின் குணகப்பெறுமதி 1.1763ஆக காணப்படுகின்றது. உயர்கல்வியில் ஏற்படும் அதிகரிப்பு வீட்டுத்துறையின் சேமிப்பில் 1.1763வீதத்தினால் நேர்கணிய அதிகரிப்பினை ஏற்படுத்தும். முன்னைய ஆய்வில் உயர்கல்வி (Certificate and Diploma) நேர்க்கணிய பொருண்மைத்தன்மை காணப்படுகின்றது[2] என்ற முடிவுடன் இணைந்ததாக இவ்வாய்வின் முடிவும் காணப்படுகின்றது.

கல்வி கற்காதவர் நீக்கப்படுகின்ற போது ஆரம்பகல்வி, க.பொ.த உயர்தரம், இடைநிலைக்கல்வி ஆகியவற்றிற்கும் வீட்டுத்துறையின் சேமிப்பிற்குமிடையிலான பிற்செலவு மதிப்பானின் குணகப்பெறுமதிகள் முறையே - 0.0982, 0.1066, 0.1745ஆகும். இவைகள் ஆய்வின் முடிவின் அடிப்படையில் பொருண்மைத்தன்மை அற்றதாக (Not significant) காணப்படுகின்றது.

வீட்டுத்துறையின் சேமிப்பில் தொழில் நிலை ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை விளக்குவதற்காக மாற்று மாறி (Dummy Variable) பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு சுயதொழில் தன்னிச்சையாக நீக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் விவசாயத்திற்கும் வீட்டுத்துறையின் சேமிப்பிற்குமிடையிலான பிற்செலவு மதிப்பானின் குணகப்பெறுமதி 0.7771ஆக காணப்படுகின்றது. வீட்டுத்தலைவர் விவசாயியாக காணப்படுவாராயின் வீட்டுத்துறையின் சேமிப்பு0.7771வீதத்தினால் நேர்க்கணிய அதிகரிப்பினை ஏற்படுத்தும்.

சுயதொழில் நீக்கப்படுகின்ற வேளை வியாபாரம், அரசதொழில், மத்திய கிழக்கு நாட்டில் தொழில் புரிதல் ஆகியவற்றிற்கும் வீட்டுத்துறையின் சேமிப்பிற்குமிடையிலான பிற்செலவு மதிப்பானின் குணகப்பெறுமதிகள் முறையே 1.2443, 1.6888, 1.5526ஆக காணப்படுகின்றது. வியாபாரம் அரசதொழில், மத்திய கிழக்கு நாட்டில் தொழில் புரிதல் ஆகியவராக காணப்படுகின்ற போது வீட்டுத்துறையின் சேமிப்புகள் முறையே 1.24431.6888, 1.5526வீதத்தினால் நேர்கணிய அதிகரிப்பினை ஏற்படுத்தும்.

சுயதொழில் நீக்கப்படுகின்ற வேளை கூலி வேலையானது வீட்டுத்துறையின் சேமிப்பில் ஏற்படுத்தும் தாக்கத்தின்பிற்செலவு மதிப்பானின் குணகப்பெறுமதி 0.5919ஆக காணப்படுகின்றது. கூலி வேலையில் ஏற்படும் அதிகரிப்பு வீட்டுத்துறையின் சேமிப்பில் 0.5919வீதத்தினால் நேர்க்கணிய அதிகரிப்பினை ஏற்படுத்தும்.முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தொழில் நிலை நேர்க்கணியத் தாக்கத்தை ஏற்படுத்துவதாக முடிவு பெறப்பட்டுள்ளது[7],[10]. இவ்வாய்விலும் உள்ளடக்கப்பட்ட தொழில் நிலைகள் நேர்கணிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

வீட்டுத்துறையின் சேமிப்பிற்கும் வருமானத்திற்குமிடையிலான பிற்செலவு மதிப்பானின் குணகப்பெறுமதி 1.4143 ஆக காணப்படுகின்றதனால்வருமானமானது ஒரு ரூபாவினால் அதிகரிக்கும் போது வீட்டுத்துறையின் சேமிப்பு 1.4143வீதத்தினால் நேர்கணிய அதிகரிப்பினை ஏற்படுத்தும்.முன்னைய ஆய்வுகளிலும் வீட்டுத்துறையின் சேமிப்பிற்கும் வருமானத்திற்கும் இடையே நேர்க்கணியத் தொடர்பு காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது[8],[9]. அந்தவகையில் வீட்டுத்துறையின் சேமிப்பினை அதிகரிப்பதில செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுள் வருமானம் முக்கிய பங்கினை வகிக்கின்றது.

வீட்டுத்துறையின் சேமிப்பில் வட்டிவீதம் ஏற்படுத்தும் தாக்கத்தினை விளக்கும் பிற்செலவு மதிப்பானின் குணகப்பெறுமதி 0.5767ஆக காணப்படுகின்றது. வட்டி வீதமானது ஒரு அலகினால் அதிகரிக்கும் போது வீட்டுத்துறையின் சேமிப்பு 0.5767சராசரி இடைப்பெறுமதியினால் நேர்க்கணிய அதிகரிப்பினை ஏற்படுத்தும்.முன்னைய ஆய்விலும் வட்டி வீதம் நேர்க்கணிய தொடர்பு காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது[11].

வீட்டுத்துறையின் சேமிப்பிற்கும் வாழ்க்கைச் செலவிற்குமானபிற்செலவு மதிப்பானின் குணகப்பெறுமதி - 0.4120ஆக காணப்படுகின்றது. வாழ்க்கைச்செலவு ஒரு அலகினால் அதிகரிக்கும் போது வீட்டுத்துறையின் சேமிப்பு 0.4120சராசரி இடைப் பெறுமதியால்வீழ்ச்சியினை ஏற்படுத்தும்.

இந்த ஆய்வின் முடிவின் அடிப்படையில் துணிவுக் குணகம் (R2)0.8774ஆக அமைந்துள்ளது.இதன்படி ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட பல்மாறி பிற்செலவு மாதிரியிலுள்ள சாரா மாறிகள் 88 சதவீதம் சார்ந்த மாறியான வீட்டுத்துறையின் சேமிப்பின் விலகலை விளக்கக் கூடியனவாகவுள்ளன.

இதேவேளை ஏனைய 12.26 சதவீதமான சார்ந்த மாறியின் விலகலை ஆய்வில் உள்ளடக்கப்படாத ஏனைய மாறிகள் விளக்குகின்றன.

பல்மாறி பிற்செலவு ஆய்வு முடிவின்படி F பெறுமதி 30.14ஆகவும், இதன் நிகழ்தகவு பெறுமதி 0.0000 ஆகவும் அமைந்துள்ளதுடன் கணிப்பிடப்பட்ட பெறுமதியானது அட்டவணைப் பெறுமதியை விட அதிகமாகவும் காணப்படுகின்றது. இதன்படிகு பெறுமதி புள்ளிவிபர ரீதியாக பொருண்மைத்தன்மையுடையதாக காணப்படுகின்றது. எனவே இவ்வாய்வில் முழு மொத்த மாதிரியும் புள்ளி விபர ரீதியாக பொருண்மையுடையதாக காணப்படுகின்றது.

### IX. முடிவுரை

வீட்டுத்துறையின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் தொர்பாக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வினூடாக ஆய்வினுடைய நோக்கங்களை அடையும் வகையில் முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைவது வீட்டுத்துறையின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை கண்டறிதலாகும். ஆய்வின் முடிவுகளின் படி வயது, பால்நிலை, திருமணநிலை, குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை, கல்வி, தொழில், வருமானம், வட்டிவீதம், வாழ்க்கைச்செலவு என்பன வீட்டுத்துறையின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனினும் ஆய்வுப்பிரதேச வீட்டுத்துறையினரின் சேமிப்பில் சமூகப் பொருளாதார காரணிகளே அதிகளவு செல்வாக்குச் செலுத்துகின்றன.

ஆய்வின் துணை நோக்கங்களான குடியியல், சமூக பொருளாதார காரணிகள் வீட்டுத்துறையின் சேமிப்பில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதனை பிற்செலவு சமன்பாட்டு முடிவுகளினூடாக விளக்கிக் காட்டலாம். இதன்படி வீட்டுத்துறையினரின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்தும் சாரா மாறிகளான, குடியியல் காரணிகளுள் வயது நேர்க்கணிய தாக்கத்தினையும், பால் நிலை, திருமணமானவர், திருமணமாகாதவர், வீட்டு அங்கத்தவர் எண்ணிக்கை என்பன எதிர்க்கணிய தாக்கத்தினையும்திருமண நிலையான விதவை, கணவனை பிரிந்து வாழ்பவர் என்பன பொருண்மைத் தன்மையற்றவையாக காணப்படுகின்றன. சமூக பொருளாதார காரணிகளுள் உயர்கல்வி, தொழில் நிலை, வருமானம், வட்டி வீதம் என்பன நேர்க்கணிய தாக்கத்தினையும்வாழ்க்கைச்செலவு எதிர்க்கணிய தாக்கத்தினையும்ஏற்படுத்துகின்றன கல்வி நிலையில் ஆரம்பகல்வி, இடைநிலைக்கல்வி, க.பொ.உயர்தரம் என்பனபொருண்மைத்தன்மையற்றவையாக காணப்படுகின்றன.

எனவே இவ்வாய்வினூடாக கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக பிரிவில் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட ஆய்வுப் பிரதேச விட்டுத்துறையினரின் சேமிப்பில் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகள் தொடர்பாகவும் அவை ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் தொடர்பாகவும் முடிவுகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளன.

### X. பரிந்துரைகள்

நிதி நிறுவனங்கள்கிராமப்புறங்களில் சேமிப்பினை தூண்டும் வகையிலான விழிப்புணர்வு, கருத்தரங்கு மற்றும் ஊக்கப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

மக்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காக விவசாயம்சார் கைத்தொழில்துறைகளை விருத்தி செய்வதனூடாக அவர்களது வருமானத்தை அதிகரிக்கச் செய்து அதனூடாக சேமிப்பினை மேம்படுத்தல்.

அரசு மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்கள் சுயதொழில் மற்றும் கூலி வேலை செய்பவர்களை அவர்களின் வருமான அதிகரிப்பிற்கு ஏற்றவகையில் பயிற்சியளித்து அவர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் சேமிப்பின் அளவை அதிகரிக்கச் செய்தல்.

நாட்டின் அரசாங்கம் கிராமங்களிலும் வீட்டுத் துறையினரின் ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி உயர்கல்வியினை மேம்படுத்துவதற்கான கொள்கைகள்திட்டங்களை வகுத்தல்

### உசாத்துணைமூலங்கள்

1. Kumarasinghe, P.J. and Jayasinghe, A., 2016. Comparative Study on the Determinants of Household Savings in the Colombo District. 13th International Conference on Business Management.
2. Fenta, H.M., Dessie, Z., Mitku, A. and Muluneh, E., 2017. Saving Habits And Its Determinants In Amhara National Regional State, Ethiopia. Arabian Journal of Business and Management Review (Oman Chapter), 6(6), p.9.
3. Andrejovská, A. and Buleca, J., 2016. Regression Analysis of Factors Influencing Volume of Households' Savings in the V4 Countries. Mediterranean Journal of Social Sciences, 7(1), p.213.

4. Dassanayake, H.D.K.D., 2011. An Empirical Investigation on Determinants and Motives of Household Saving in Sri Lanka(Doctoral dissertation, University of Sri Jayewardenepura, Nugegoda).
5. Attanasio, O.P. and Szekely, M., 2001. Household saving in developing countries: Inequality, Demographics and all that. In Paper for World Bank April 2000 ABCDE Conference in Development Economics.
6. Hevia, C. and Loayza, N., 2012. Saving and growth in Sri Lanka. World Bank.
7. Saqib, S., Panezai, S., Ullah, H., Ali, U. and Usman, H., 2016. Determinants of Household Savings in Rural and Urban Areas: The Case of Chitral District, Pakistan. International Journal of Academic Research in Business and Social Sciences, 6(3), pp.54-64.
8. Soharwardi, M.A., Khan, A.S. and Sherani, M.K., 2014. Determinants of Household Savings: A Case Study of Yazman-Pakistan. International Journal of Scientific & Engineering, pp.1624-1630.
9. Markos, W., 2015. Determinants and Behavior of Rural Household Saving: A Case of Dale Woreda, Sidama Zone, International Journal of Multidisciplinary Advanced Research Trends Issn : 2349-7408 Volume II, Issue 2(3)
10. Kibet, L.K., Mutai, B.K., Ouma, D.E., Ouma, S.A. and Owuor, G., 2009. Determinants of household saving: Case study of smallholder farmers, entrepreneurs and teachers in rural areas of Kenya. Journal of Development and Agricultural Economics, 1(7), pp.137-143.
11. [11]. Hashim, D.B., Pin, F.B. and Isa, M.Y.B.M., 2017. Factors Influencing Savings Rate in Malaysia. International Journal of Economics and Finance, 9(6), p.52.